முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க ஈரோட்டில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கே.எம்.சி.ஹெச் .புதிய மருத்துவமனை திறப்பு விழா, 2 வது தென்னிந்திய ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி துவக்கி வைத்தல் ,பெருந்துறை தெற்கு ஒன்றியத்தில் குள்ளம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா, பட்டா வழங்குதல், தாட்கோ கடன் வழங்குதல், நல்லாம்பட்டியில் புதிய பள்ளியில் கட்டிட திறப்பு விழா ஆகிய நிகழ்ச்சிகளில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்பித்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம், ராஜேந்திரம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சை பெரிய கோவில் சதய விழா தலைவர் து.செல்வம், ஒன்றியக்குழு தலைவர் கல்லணை செல்லக்கண்ணு உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியத்தில் கழகக் கொடியேற்றி நல உதவிகள்!

மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கிருஷ்ணகிரி, டிச. 31- கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப் பட்டணம் கிழக்கு ஒன் றியம் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தட்ரஅள்ளி, ராமர் கொட்டாய், அகரம், சீகல அள்ளி உள்ளிட்ட இடங்களில் இரு வண்ண கொடியேற்றி காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியத்திற் குட்பட்ட 14 ஊராட்சி களில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர் களுக்கு புத்தா டைகள் மற்றும் 500 க்கும் மேற் பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவி வழங் கும் நிகழ்ச்சி நடை பெற்றது.

கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் அவர்களின் அறிவுரைபடியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பின் படி (28/12/24) அன்று தஞ்சாவூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கல்யாணசுந்தரம் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் பாஸ்கரன் வரவேற்புரை ஆற்ற கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான், தலைமை கழக வழக்கறிஞர் நாகை மூ. தினேஷ்குமார் சிறப்புரையாற்ற எதிர்வரும் 18/01/25 ம் ஆண்டு நடைபெறும் வழக்கறிஞர் அணி 3வது மாநில மாநாடு குறித்து வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் வழக்கறிஞர் ஆடுதுறை உத்திராபதி மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் அவர்களின் அறிவுரைபடியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ MP அவர்களின் அறிவிப்பின் படி (28/12/24) அன்று திருவாரூர் மாவட்டம் ஆர்விகாஸ் மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் விநாயகமூர்த்தி வரவேற்புரை ஆற்ற கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான், தலைமை கழக வழக்கறிஞர் நாகை மூ.தினேஷ்குமார் சிறப்புரையாற்ற எதிர்வரும் 18/01/25 ம் ஆண்டு நடைபெறும் வழக்கறிஞர் அணி 3வது மாநில மாநாடு குறித்து வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழக்கறிஞர் அணி மாநில மாநாட்டில் வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்துகொள்வோம் என தீர்மானம் நிறைவேற்றபட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.கே. தண்டபாணி

டிசம்பர் 31 (2021)

1969ஆம் ஆண்டில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1972ஆம் ஆண்டில் கிளை பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளராகவும் –1991 முதல் மறையும் காலம் வரையிலான 25 ஆண்டுகள் தொடர்ந்து காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1986, 1996, 2006, 2011 ஆகிய நான்கு முறை, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்றத் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாம், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம்,கண் சிகிச்சை, அக்குபஞ்சர் சிகிச்சை, உள்ளங்கால் சிகிச்சை ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். 45 பேருக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில், மாவட்டக் கழகச் செயலாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் – பெரம்பலூரில்

திருச்சி மண்டல அளவிலான ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம்!

ஆ.இராசா.எம்.பி. - அந்தியூர் பி.செல்வராஜ்.எம்.பி. - அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் - டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் ஆ.கிருஷ்ணசாமி. எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், டிச. 31- மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் திருச்சி மண்டல அளவி லான (திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி மாநகரம் கிழக்கு, மேற்கு, புதுக் கோட்டை தெற்கு, வடக்கு, பெரம்பலூர், அரி யலூர்) ஆகிய மாவட்டங்க ளின் ஆலோசனைக் மற் றும் ஆய்வுக் கூட்டம், பெரம்பலூர் கர்ணம் சுப்ர மணியம் திருமண மண்ட பத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ண சாமி.எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். மாநில ஆதிதிரா விடர் நலக்குழு துணைச் செயலாளரும் திருச்சி மண்டல பொறுப்பாளரு மான பா.துரைசாமி வர வேற்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் கழக துணைப்பொதுச்செயலா ளர் இராசா.எம்.பி.,பேசு கையில்,

சாதிய ஒழிப்பில் வடக் கில் இருந்து அம்பேத்கர், தெற்கில் இருந்து பெரியார் என இரண்டு தலைவர்கள் ஈடுபட்டனர். காந்திக் கும்,அம்பேத்கருக்கும் பிரச்சினை வந்தபோது, காந்தி சாகும் வரை உண் ணாவிரதம் இருந்தார். அப்போது தெற்கில் இருந்து பெரியார் மட் டுமே ஆதரவுக் குரல் தந் தார். 1957 ல் பெரியார், அண்ணா இருவரும்தான் மஹாராஷ்டிரா சென்று, சாதிய ஒழிப்பில் ஆதரவுக் கடிதம் அம்பேத்கர் இடம் வாங்கி வந்து அப்போ தைய விடுதலை பத்திரிகை யில் வெளியிட்டனர்.

சாதிய ஒழிப்பில் தி.மு.க.எப்போதும் முக் கிய பங்கு வகிக்கிறது. சாதிய ஒழிப்பில் ஈடுபடும் குடும்பம் தான் ஆட்சிக்கு வரவேண்டும். அதைத் தான் தமிழக மக்க ளும்,நாங்களும் ஏற்றுக் கொள்வோம். என்று பேசி னார்.

முன்னதாக முத்தமிழறி ஞர் கலைஞர், முரசொலி செல்வம்,க.சுந்தரம், எஸ். சிவசுப்ரமணியம், ஆகி யோரது உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப் பட்டது.

இந்த கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், ஆதி திராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம்,வி.பி. இராசன், செ.புஷ்பராஜ், திப்பம்பட்டி ஆறுச்சாமி, மாநில துணை செயலாளர் கள் பொன்தோஸ்,சி.தசர தன், மு.பரமாநந்தன், சா. ராஜேந்திரன், மாரியப்பன் கென்னடி,பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண் ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன்,

அழகு.நீலமேகம், ஆர். முருகேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கள் தழுதாழை பாஸ் கர்,சன்.சம்பத், நூருல் ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ் குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சி.ராஜேந்தி ரன், டாக்டர் செ.வல்ல பன், ந.ஜெகதீஷ்வரன், ஒன்றிய பெருந்தலைவர் கள் க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ் கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர்கள் வ.சுப்ரமணியன், அ.அப்துல்கரீம் மா. பிரபா கரன், டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணி வாசகம்,

பெரம்பலூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் வரகூர்.ராஜேந்திரன், தம்பை.தர்மராஜ், அ.கண் ணபிரான், சி.பால கிருஷ் ணன், சி.செல்வம்,சி.சிவக் குமார், க.அசோக்குமார், அரியலூர் மாவட்ட ஆதிதி ராவிடர் நலக்குழு நிர்வாகி கள் இரா.கிருஷ்ண மூர்த்தி, செந்தில் குமார்,கோ.கனகராஜ், கரு ணாநிதி , பழனிவேல்,தங்க பிரகாசம், கருணாநிதி, சகா தேவன் மற்றும் திருச்சி தெற்கு, திருச்சி மத்திய மாவட்டம், திருச்சி மாநக ரம் கிழக்கு, மேற்கு, புதுக் கோட்டை தெற்கு வடக்கு மாவட்டங்களைச் சேர்ந்த ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கே.சி.ஆர். குமார் நன்றியுரையாற் றினார்.

கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் அவர்களின் அறிவுரைபடியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ MP அவர்களின் அறிவிப்பின் படி (28/12/24) அன்று திருவாரூர் மாவட்டம் ஆர்விகாஸ் மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் விநாயகமூர்த்தி வரவேற்புரை ஆற்ற கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான், தலைமை கழக வழக்கறிஞர் நாகை மூ.தினேஷ்குமார் சிறப்புரையாற்ற எதிர்வரும் 18/01/25 ம் ஆண்டு நடைபெறும் வழக்கறிஞர் அணி 3வது மாநில மாநாடு குறித்து வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழக்கறிஞர் அணி மாநில மாநாட்டில் வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்துகொள்வோம் என தீர்மானம் நிறைவேற்றபட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆலடி அருணா

டிசம்பர் 31 (2004)

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக மூன்று முறையும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், தமிழக சட்டத்துறை அமைச்சராகவும், தி.மு.கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இளமைக் காலம் முதல் பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட பற்றும் உறுதியும்; அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகளால்கூட சேதாரமடையவில்லை” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.